DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

| | |
|---|---|
| **IN THE COURT OF** | **Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.** |
| Calendar | |
| Miscellaneous | |
| Preliminary register | |
| Sessions | Special CC.1/2017 |
| Deposition of witness for | : P.W.13 |
| Name | : டாக்டர்.ஜி.ரமேஷ் |
| Father's Name | : கே.குருசாமி |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 by Tmt. JAYASREE, Junior Assistant (I/C), of this court on the day of 01.10.2019.

**முதல் விசாரணை**

நான் தற்போது JCT College of Engineering and Technology ல் முதல்வராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்னதாக Shri Krishna College of Technology ல் முதல்வராக பணி புரிந்து வந்தேன். 11.02.2013 ம் தேதி சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் எனக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்த கடிதத்தில் Shri Krishna College of Technology கல்லூரியில் 2002 முதல் 2004 வரை பயின்று கொண்டிருந்த பி.தேவிப்பிரியா, த/பெ.பன்னீர்செல்வம் என்பவரின் கல்லூரியில் செலுத்திய கட்டண விவரங்களான Tuition Fees, Development Fees,

Association Fees, Book Fees, Seminar and Miscellaneous Fees etc வழங்கும்படி எனக்கு தெரிவிக்கப்பட்டது. முதல் வருடம் மேற்படி மாணவி ரூ.69,350/-ம், 2 வது வருடம் ரூ.57,750/- ஆக மொத்தம் ரூ.1,27,100/- கல்வி கட்டணமாக செலுத்தியுள்ளார். மேற்படி மாணவி செலுத்திய கட்டணங்கள் குறித்து 01.03.2013 ம் தேதி ஒரு பதில் கடிதத்தை நான் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அந்த கடிதம்தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகிறது. அந்த கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை நான்தான் வழங்கியுள்ளேன். அது அ.சா.ஆ.31 ஆகும். இந்த வழக்கு குறித்து சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் 25.02.2014 ம் தேதி என்னை JCT College of Engineering and Technology கல்லூரியில் வைத்து விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

VLB Janakiammal College தான் Shri Krishna College of Technology என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து ஆவண ஆதாரத்தை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. 2002-2004 ம் வருடங்களில் மாணவர்கள் செலுத்தும் கட்டணங்களுக்கு கல்லூரியில் அவ்வப்போது கையால் எழுதப்பட்ட ரசீதுகள் வழங்கப்படும் என்றால் சரிதான். அ.சா.ஆ.31 ஆவணத்துடன் மாணவி தேவிப்பிரியா செலுத்திய கல்லூரி கட்டணத்திற்கு கல்லூரியால் வழங்கப்பட்ட ரசீதின் நகலை இணைத்து கொடுக்கவில்லை என்றால் அது சரிதான். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அ.சா.ஆ.31 ல் கல்லூரிக் கட்டணங்கள் அதிகப்படியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல.

Sd/-டாக்டர்.ஜி.ரமேஷ் /True Copy/

Sd/-Special Judge,
Special Court for Trial of cases
Under the Prevention of Corruption Act,
Salem.